DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 265 of 2024 |
| Deposition of witness for | : | PW6 |
| Name | : | சேகர் |
| Father's Name | : | ராமுகான் |
| Village | : | B.C.புதூர் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | ஓட்டுநர் |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 03rd day of April 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது B.C.புதூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக போட்டேன், தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை, காலை சுமார் 06.30 முதல் 07.00 மணிக்குள் கந்திக்குப்பம் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிப்பதாக சொன்னார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

ஓரப்பம் ஜெங்ஷன் அருகே தான் மேற்படி விபத்து நடந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்து தகவல் கேள்விப்பட்டு உறவினர்கள் காவல் நிலையம் சென்ற போது நீங்களும் சென்றீர்கள் என்றால் சரிதான்.

அதன் பின்னிட்டு காவல் நிலையத்தில் இருந்து ஓரப்பம் ஜெங்ஷன் சென்று காவல் ஆய்வாளர் சபிதா என்பவர் சம்பவ இடம் சென்று வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்து உங்களிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து சம்பவ இடத்தில் வைத்து போடப்பட்ட கையெழுத்து என்றால் சரிதான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

கந்திக்குப்பம் காவல் நிலையத்தில் எத்தனை கையெழுத்து போட்டீர்கள் என்றால் இரண்டு கையெழுத்து. அதில் ஒன்று எழுதப்பட்டிருந்தது மற்றொன்று எழுதப்படாமல் வெள்ளைத்தாளாக இருந்தது என்றால் சரியல்ல, இரண்டுமே எழுதியிருந்தது. உங்களிடம் காட்டப்பட்ட கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டீர்களா அல்லது வேறு இடத்தில் வைத்து போட்டீர்களா என்று உங்களால் உறுதியாக சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும், காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்திலிருந்து எந்த திசையில் EB கம்பம் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திலிருந்து மேல்நிலைத்தண்ணீர் தொட்டி எந்த திசையில் இருந்தது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.